DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.206/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு. ஆறுமுகம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | பெரியசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026.

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கரூர் நகர போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கடந்த 24.09.2018ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் ரகுமான் அவர்களுடன் காவலர் செந்தில்குமார் நானும், மணல் திருட்டு சம்பந்தமாக அதிகாலை புறப்பட்டு மகாதானபுரம், சிந்தலவாடி, ஆகிய இடங்களில் கண்காணித்து கொண்டிருந்தோம்.

2. உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி திருச்சி–கரூர் ரோட்டில் லாலாப்பேட்டை மேம்பாலம் அருகில் பழைய மணல் ரீச்சில் ஆற்றங்கரையில் கண்காணித்த போது TN 40 A9121 என்ற லாரியில் அரசு அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த 2 நபர்கள் நாங்கள் வருவதை கண்டு ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து ஒரு நபரை பிடித்தோம் மற்றொரு நபர் ஓடிவிட்டார்.

3. அவரை விசாரித்த போது தனது பெயர் சிவக்குமார் த/பெ முருகேசன், சூலூர் கோயம்புத்தூர் என்றும் வாகனம் தன்னுடையது என்றும் அதை ஓட்டி

வந்தவர் நான் தான் என்றும், ஒப்புக்கொண்டார். ஓடிய நபரை பற்றி விசாரித்த போது லாலாப்பேட்டை, பிள்ளாபாளையத்தில் பிரதீப் த/பெ மதிவாணன் என்றும் கூறினார். பிரதீப் அழைத்தன் பேரில் நாங்கள் இருவரும் சென்று திருட்டுத்தனமாக மணல் அள்ளினோம் என்று ஒப்புக்கொண்டார். காரணம் கூறி அதிகாலை 05.00 மணிக்கு கைது செய்தோம்.

4. பின்பு அந்த அகால நேரத்தில் அந்த இடத்தில் யாரும் இல்லாத காரணத்தினால் மேற்படி வாகனத்தையும், 2 யூனீட் மணலையும் காலை 06.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அந்த மகஜரில் நானும், செந்தில்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

5. பின்பு வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் காலை 07.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. இந்த வழக்கில் தனி நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் எத்தனை பேர் ரோந்து சென்றார்கள். எந்த வாகனத்தில் ரோந்துசென்றார்கள் என்றால் மூன்று பேர் சென்றோம் சொந்த வாகனத்தில் சென்றோம். அந்த வாகனத்தை பற்றி விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் போது கிராம பட்டாவில் கையெழுத்து செய்யவேண்டும் என்றால் நாங்கள் கையெழுத்து செய்யவில்லை. அந்த ஆவணங்கள் எதுவும் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ரோந்து பணிக்கு கடவுச்சீட்டு எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் ரோந்து சென்ற பணிக்கு காவல் உதவி ஆய்வாளரிடம் எதாவது ஆவணம் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. ஆய்வாளர் உத்தரவின் படிதான் ரோந்து சென்றோம். இந்த வழக்கில் கனிம வளத்துறை, வருவாய்த்துறை எதாவது புகார்கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எவ்வளவு மணல் கைப்பற்றினிர்கள் என்றால் சுமார் 2 யூனிட் மணல் இருக்கும். நான் முதல் விசாரணை சொன்ன சங்கதிகளைத்ததான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

3. நான் முதல் விசாரணையில் சொன்ன மணலின் அளவைத்தான் முதல் தகவல் அறிக்கையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்லும் ஆற்றுப்பகுதி கிராம மக்கள் காலைக்கடன் கழிக்கும் இடம் என்றால் ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் இல்லை. நான் தனிப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் ஆய்வாளர் விசாரித்தார். கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தேன் என்றால் இல்லை சம்பவயிடத்தில் தயார் செய்தேன்.

4. டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் டைப் செய்யப்பட்டதா என்ாறல் இல்லை சம்பவயிடத்தில டைப் செய்யப்பட்டு காவல் நிலையத்தில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து விட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக புகார் கொடுத்து வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. புள்ளிவிவரக்கணக்கிற்காக உதவி ஆய்வாளர் வழக்கு தாக்கல் செய்து வழக்குக்காக ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:20:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.